1971 டிசம்பர் 14]

கூட்டுறவுச்சங்கங்களுக்கு தனி வாரியம்

** 379. வினா—திரு. சு. துரைசாமி :* மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்களில் அதிகமானவர்கள் பணிபுரிவதனால் அதனை தனி வாரியமாக அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களை தனி வாரியமாக அமைக்கும் உத்தேசம் இல்லை என்று அமைச்சர் பதில் சொன்னார்கள். கூட்டுறவுச் சங்கங்கள் ஏராளமாக இருப்பதால், அவற்றை ஒழுங்குபடுத்துவதற்காக, அவற்றை தனி வாரியமாக அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட எண்ணம் இல்லை. கூட்டுறவுச் சங்கங்களுக்கு தனி வாரியம் தேவையில்லை என்று கருதுகிறேன். காரணம், ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும், ஒவ்வொரு வாரியமாகவே செயல்படுகின்றது.

பவானி கூட்டுறவு விற்பனைச் சங்கம்

** 380. வினா—திரு. ஈ. எம். நடராசன் :* மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், பவானி கோவாப்பரேடிவ் மார்க்கெட்டிங் சொசைட்டியின் நிர்வாக சபை எப்பொழுது ஏன் கலைக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கோவை மாவட்டம், பவானி கூட்டுறவு விற்பனைச் சங்கம் செயல்படுவதில் பல ஒழுங்கீனங்கள் காணப்பட்டதால் 5—10—1968 அன்று அதன் செயற்குழு கலைக்கப்பட்டது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, பவானி கூட்டுறவு விற்பனைச் சங்கம் செயல்படுவதில் பல ஒழுங்கீனங்கள் காணப்பட்டதால் அது கலைக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். அந்தக் குழுவின் தலைவர் கையாடல் செய்ததாக பரவலாகப் பேசப்படுகிறது. அவர் பேரில் இது வரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அந்தப் பணத்தை திருப்பிப் பெற அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, கலைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் மீதும், இன்னும் 9 பேர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சர்சார்ஜ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் முடியவில்லை.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் கையாடல்கள் நடைபெற்று விடுகின்றன. கையாடல் கண்டுபிடிக்கப்பட்ட பின் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் பணத்தை திருப்பிச் செலுத்திவிடுகிருர்கள். அவர்கள் மீது கிரிமினல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவரவர்களே, அதுவும் ஆராயப்பட்டு வருகிறது.

உழவர்களுக்கு வழங்கப்படும் டிராக்டர்கள்

*381 வின—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

வேளாண்மைத்துறை தொழிற் கழகத்தின் சார்பில், எந்தெந்த வகையான டிராக்டர்கள் தற்போது விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள், வெளி நாட்டிலிருந்து டிராக்டர்கள் வரவழைத்து தமிழ் நாட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது என்று கூறினர். இவ்வளவு தரப்பட்டும், தேவையின் அளவு பூர்த்தி ஆகாத சூழ்நிலை இருக்கிறது. நெருக்கடிச் சூழ்நிலை தீர்ந்த பிறகாவது இந்த டிராக்டர் நெருக்கடியைப் போக்க உரிய தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இதற்கு ஏற்கனவே பதில் சொல்லப்பட்டிருக்கிறது. வெளிநாட்டு டி-25, செட்டார் 2011 ஆகிய டிராக்டர்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. ஆனல் குறிப்பிட்ட ஒரு டிராக்டரையே தான் தேவை என்று எல்லோரும் விரும்புகிற காரணத்தால், அவர்களுக்குக் கொடுக்க முடியவில்லை.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, வெளி நாட்டிலிருந்து வரவழைக்கப்படுகிற, குறிப்பாக, சோவியத் யூனியனிலிருந்து வருகிற டிராக்டர்கள் மேலானவை, உறுதியானவை என்று சொல்லப்படுகிறது. அப்படியானல், அந்த நாட்டிலிருந்து அதிகமாக டிராக்டர்கள் வரவழைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, டி-25 ரஷ்ய டிராக்டர் தான்.

@ 400—404 பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.